| | | | |
|---|---|---|---|
| Headline | The contributions toward hockey will continue | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 08 Apr 2021 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 14 |
| ArticleSize | 174 cm² | Journalist | NULL |
| PR Value | RM 3,417 | | |
| | | | |






# ஹாக்கி விளையாட்டிற்கு வழங்கி வரும் ஆதரவு தொடரும்

கடந்த சனிக்கிழமை முடிவுற்ற மலேசிய டிஎன்பி ஹாக்கிப் போட்டியின் ஏற்பாட்டினை உறுதி செய்த வகையில் டிஎன்பி நிறுவனம் 2 மில்லியன் வெள்ளி நிதியை மலேசிய ஹாக்கி சம்மேளனத்திடம் வழங்கியது.

அந்நிறுவனத்தின் கார்ப்பரேட் சேவை தலைமை அதிகாரி முகமட் அரேப் ஸைனுல் இந்தத் தொகைக்கான காசோலையை ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோஸ்ரீ சுபாஹான் கமாலிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி டிஎன்பி தலைமையகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. கடந்த 2006ஆம் ஆண்டு தொடங்கி தேசிய ஹாக்கி லீக் போட்டியில் டிஎன்பி நிறுவனம் முதன்மை ஆதரவாளராக தொடர்ந்து இருந்து வருகின்றது.

கோவிட்-19 பெருந்தொற்றின் காரணத்தினால் விளையாட்டுப் போட்டிகள் எஸ்ஓபி விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்படுகின்றது. இதனால் போட்டி ஏற்பாட்டுச் செலவினங்களும் அதிகரிக்கின்றன.

ஆனாலும் டிஎன்பி இந்த இக்கட்டான நிலையிலும் ஹாக்கி விளையாட்டிற்கு வழங்கி வரும் ஆதரவைக் கைவிடவில்லை என முகமட் அரிப் தெரிவித்தார்.

Powered by: isentia